People's Watch
No.6, Vallabai Road, Chokkikulam, Madurai - 625 002.
Phone: 0452-2531874 & 2539520 Fax: 0452- 2531874
E.mail: info@pwtn.org Web: www.pwtn.org

**மாண்புமிகு. தமிழக முதல்வர் அவர்கள்,**
தமிழ்நாடு அரசு,
தலைமைச் செயலகம்,
சென்னை 600 009.

பேரன்புடையீர்

மக்கள் கண்காணிப்பகத்தின் இனிய வணக்கங்கள்.

மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு மக்கள் கண்காணிப்பகம் அமைப்பு கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக மனித உரிமை செயல்பாட்டுத் தளத்தில் இயங்கி வருகிறது. கடந்த ஆண்டு முதல் சித்ரவதைத் தடுப்பிற்கான தேசியத் திட்டத்தில் இந்தியா முழுவதிலுமுள்ள 10 மாநிலங்களிலும் செயல்பட்டு வருகிறது.

எவ்வித அரசியல் கட்சி சார்புமின்றியும், தனி நபர் மீதான விருப்பு, வெறுப்புக்களைக் கடந்தும், மனித உரிமை அரங்கில் அரசைக் கண்காணித்து மனித உரிமைக் கலாச்சாரத்தை வளர்த்தெடுக்கும் விதமாக எங்களது பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

தாங்கள் இச்சம்பங்களில் உடனடியாக தலையிட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

நம்பிக்கையுடன் மனித உரிமைப் பணியில்

(ஹென்றி டிபேன்)
நிர்வாக இயக்குநர்

நகல்கள்

1. அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும்
2. அனைத்து மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளர்களுக்கும்
3. அனைத்து அரசியல் கட்சிகளுக்கும்

மக்கள் கண்காணிப்பகம்

# தமிழகத்தில் மனித உரிமை மீறல்கள் - தொகுப்பு
# 08.03.2008 முதல் 14.03.2009 முடிய

| வ. எண் | செய்தி கிடைத்த நாள் | மாவட்டம் / பெயர் விபரம் மற்றும் சம்பவ விபரம் | பிரிவு | தகவல் பெற்றது. |
|---|---|---|---|---|
| 150. | 08.03.09 | **மதுரை மாவட்டம் :** மேலூர் அரசு மருத்துவமனையில் தண்ணீர் பஞ்சம் தலைவிரித்து ஆடுவதால் பிரசவ வார்டுகளில் பிறந்த குழந்தைகளை குளிபாட்ட முடியாமல் துணியால் துடைத்துக் கொடுத்து வருகின்றனர். இதனால் தொற்று நோய் பரவும் அபாயம் உள்ளது. | அடிப்படை வசதியின்மை | தமிழ்முரசு |
| 151. | 08.03.09 | **பெரம்பூர் மாவட்டம் :** வியாசர்பாடி சர்மாநகரில் எருக்கஞ்சேரி புதிய கட்டிட கட்டுமான பணிக்காக அருகில் இருந்து குப்பைமேட்டில் செங்கல்கள் அடுக்கி வைக்கப்பட்ட குப்பை மேட்டில் உடல் முழுவதும் சிகரெட்டால் சூடு வைத்த நிலையில் 8 மாத பெண் குழந்தை ஒன்று கிடந்தது. | குழந்தைகளுக்கு எதிரான வன்முறை | தமிழ்முரசு |
| 152. | 08.03.09 | **விருதுநகர் மாவட்டம் :** விருதுநகர் தொடக்க கல்வி அலுவலகத்தில் ஆசிரியர்களுக்கு சம்பள பில் போடுவதில் பல லட்சம் மோசடி கண்டு பிடிக்கப்பட்டதை தொடர்ந்து 2 தொடக்க கல்வி அதிகாரிகள் உட்பட 3 பேரை சஸ்பெண்ட் செய்து அரசு உத்தரவிட்டுள்ளது. | மோசடி | தமிழ்முரசு |
| 153. | 08.03.09 | **திருநெல்வேலி மாவட்டம் :** சங்கரன்கோவில் அருகே கோவில் வழிபாட்டு உரிமையை நிலைநாட்ட முயன்ற தலித் மக்கள் ஈஸ்வரன், பரமசிவன் ஆகிய இரண்டு பேர் கொடூரமாக படுகொலை செய்யப்பட்டனர். | தலித்துகள் மீதான வன்முறை | |
| 154. | 09.03.09 | **தேனி மாவட்டம் :** கம்பம்மெட்டு சோதனை சாவடியில் மாவட்ட குடிசை பொருள் வழங்கல் அலுவலர் தர்மராஜ் தலைமையில் ஊழியர்களின் வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது தேனியில் இருந்து கேரளா நோக்கி சென்ற மினி லாரியில் 40 முட்டை ரேசன் அரிகி பறிமுதல் செய்தனர் | ரேசன் அரிசி பறிமுதல் | தினகரன் |
| 155. | 09.03.09 | **கோவை மாவட்டம் :** வடவள்ளி வீரகோணத்தைச் சேர்ந்தவர் விஷ்ணுபிரியா (29) இவருக்கும் கேரள மாநிலம் கோழிகோடு திருக்கைகாடு பகுதியைச் சேர்ந்து சூர்யபிரகாஷ் கடந்த சில ஆண்டுகளுக்கு முன் திருமணம் நடந்தது. இந்நிலையில் சூரியபிரகாஷ் மற்றும் அவரது குடும்பத்தினர் சேர்ந்து வரதட்சணை கேட்டு கொடுமைப்படுத்தியதாக கோவை மேற்குப் பகுதி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தீக்கதிர் |
| 156. | 09.03.09 | **கோவை மாவட்டம் :** மேட்டுபாளையத்தை அடுத்துள்ள வேடர்காலணி சேர்ந்தவர் சேவியர் இவரது மகள் சோபியா (11) இவர் பள்ளி செல்வதற்காக டவுன் பஸ்சில் ஏறும் போது பஸ் கண்டக்டர் முத்துசாமி (52) கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளியதால் சோபியாவிற்கு காயம். இது குறித்து மேட்டுபாளையம் காவல் நிலையத்தில் புகார். | | தீக்கதிர் |

| | | | | |
|---|---|---|---|---|
| 157. | 09.03.09 | **சென்னை மாவட்டம் :** மீஞ்சூர் தேரடி தெருவைச் சேர்ந்தவர் வெங்கடேசன் இறால் பண்ணை வைத்துள்ளார். இவரது மனைவி ஹேமலதா (31). இவர்களுக்கு ஒரு மகன் ஒரு மகள் உள்ளனர். வெங்கடேசன் இரண்டாவது திருமணம் செய்து கொண்டார். இவரை வெங்கடேசன் எரித்து கொலை செய்துள்ளதாக காட்டூர் காலவ் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | பிரபாகர் RMA |
| 158. | 09.03.09 | **சென்னை மாவட்டம் :** சென்னையை அடுத்த மதுராவயல் தெருவைச் சேர்ந்தவர் ராமன். இவருடைய மகள் கற்பகம் (210 போரூர் தென்னை அகரத்தை சேர்ந்தவர் துரைசிங்கம் இவருடைய மகன் ஸ்டாலின் இருவரும் கடந்த 2 வருடமாக காதலித்து வந்தனர். கற்பகத்திடம் ஸ்டாலின் திருமண ஆசை காட்டி பாலியல் பலாத்காரம் செய்தார். இது குறித்து சென்னை புறநகர் காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | |
| 159. | 09.03.09 | **சென்னை மாவட்டம் :** ஆவடி காந்திநகர் ராமானுஜம் தெருவைச் சேர்ந்தவர் பெருமாள் (30) இவரது மனைவி முனியம்மாள் (25) இவர்களுக்கு இரண்டு குழந்தைகள். இந்நிலையில் கணவன், மனைவியிடையே ஏற்பட்ட தகராறில் முனியம்மாள் தீக்குளித்து தற்கொலை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | |
| 160. | 10.03.09 | **சென்னை மாவட்டம் :** அரசு போக்குவரத்து கழக தலைமை அலுவலகத்தில் கணக்கில் வராத ஆறு லட்சத்து 19 ஆயிரம் ரூபாயை லஞ்ச ஒழிப்பு துறை போலீசார் பறிமுதல் செய்தனர். | லஞ்சம் | தினமலர் |
| 161. | 10.03.09 | **திருச்சி மாவட்டம் :** திருச்சியில் பத்திரபதிவு அலுவலகங்களில் லஞ்ச ஒழிப்பு போலீசார் நடத்திய சோதனையில் பத்திர எழுத்தர் புரோக்கர் உட்பட 18 பேர் கைது. இவர்களிடமிருந்து இரண்டு லட்சத்து 33 ஆயிரம் ரூபாய் கைப்பற்றப்பட்டது. | லஞ்சம் | தினமலர் |
| 162. | 10.03.09 | **நாமக்கல் மாவட்டம் :** நாமக்கல் மாவட்ட ஒருங்கிணைப்பாளராக வீசாணத்தை சேர்ந்த பெல்லாசேகர் (45) திட்டத்திற்கு ஒதுக்கப்படும் நீதியில் பல்வேறு முறைகேடுகளை செய்துள்ளார். இது தொடர்பாக மாவட்ட கலெக்டர் சகாயத்திடம் புகார். | லஞ்சம் | தினமலர் |
| 163. | 10.03.09 | **மதுரை மாவட்டம் :** சம்பட்டிபுரம் பகுதியைச் சேர்ந்தவர் பார்த்திபன். இவர் கேட்டரிங் படித்து பிரான்ஸ் நாட்டில் பணி புரிகிறார்.இவருடைய மனைவி கோகிலா (22). இவர்களுக்கு 3 மாதங்களுக்கு முன் திருமணம். திருமணம் முடிந்ததும் கணவருடன் வெளிநாடு செல்ல விசா கிடைக்காததால் கோகிலா தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். இது குறித்து எஸ்.எஸ். காலணி போலீசார் வழக்குபதிவு. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 164. | 10.03.09 | **விருதுநகர் மாவட்டம் :** சிவாகிசியில் ஸ்டாட் ஆகாத பள்ளி மாணவி கார்த்தீஸ்வரி அதே வேனில் சிக்கி பலியானார். இது குறித்து சிவகாசி டி.எஸ்.பியிடம் போலீசார் புகார். | குழந்தைகள் மீதான வன்முறை | தினகரன் |
| 165. | 10.03.09 | **சென்னை மாவட்டம் :** உள்ளகரம் புழுதிவாக்கம் நகராட்சியில் 7வது வார்டு அதிமுக கவுன்சிலர் | பெண்களுக்கு எதிரான | பிரபாகர் RMA |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சரஸ்வரி மீது நிலத்தகராறு காரணமாக இவரது உறவினர்கள் எரித்து கொல்ல முயற்சி. இது குறித்து புறநகர் கமிஷனர் ஜாங்கிட்டிடம் புகார். | வன்முறை | |
| 166. | 10.03.09 | **சென்னை மாவட்டம் :** சென்னை துறைமுக குடியிருப்பு பகுதியைச் சேர்ந்தவர் கேசவரம் (42) இவருடைய மனைவி லடசுமி. கடன் தொல்லை காரணமாக கணவன், மனைவி இருவரும் விஷம் குடித்து தற்கொலை. இது குறித்து நீலாங்கரை போலீசார் வழக்கு பதிவு செய்து வருகின்றனர். | பெண்களுக்கு எதிரான வன்முறை | பிரபாகர் RMA |
| 167. | 10.03.09 | **சென்னை மாவட்டம் :** பழவேற்காடு பகுதியில் உள்ள லைட்அவுஸ் ஊராட்சிமன்ற தலைவராக தங்கவேல் என்பவர் இருந்தார். இவர் ஊராட்சியின் பணத்தை கையாடல் செய்ததாக மன்ற உறுப்பினர்கள் மாவட்ட கலெக்டரிடம் புகார் செய்தனர். இதையடுத்து அவரை தலைவர் பதவியில் இருந்து மாவட்ட கலெக்டர் நீக்கினார். அப்பதவிக்கு 2 1/2 லட்சத்துக்கு ஏலம் விடப்பட்டது. இது குறித்து கலெக்டரிடம் புகார். | | பிரபாகர் RMA |
| 168. | 10.03.09 | **சென்னை மாவட்டம் :** பட்டினபாக்கத்தை சேர்ந்தவர் சுமதி (25) இவரை காஞ்சிபுரத்தைச் சேர்ந்த குடுகுடுப்பக்காரார் கண்ணன் (22) சுமதியிடம் தவறாக நடக்க முயற்சித்துள்ளார். இது குறித்து பட்டினபாக்கம் காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | பிரபாகர் RMA |
| 169. | 10.03.09 | **சென்னை மாவட்டம் :** அயனாவரம் வசந்தா கார்டனில் வசிப்பவர் யோகானந்தன். கார் நிறுவன அதிகாரி இவருக்கும் மதுராந்தகத்தை சேர்ந்த தீபாதேவி என்பவருக்கும் 2 ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடந்தது. இந்நிலையில் சொந்த வீடு வாங்க பணம் கேட்டு சித்திரவதை. மனமுடைந்த தீபாதேவி தீக்குளித்து தற்கொலை செய்தார். போலீசார் வழக்கு பதிவு. | பெண்களுக்கு எதிரான வன்முறை | பிரபாகர் RMA |
| 170. | 10.03.09 | **கன்னியாகுமரி மாவட்டம் :** தக்கலை சேர்ந்த பர்கூதின்அலி என்ற மாணவர்களை சன் பொறியியல் கல்லூரி முதல்வர் பூட்டிய அறைக்குள் சித்திரவதை. மாணவர் படுகாயம். மருத்துவமனையில் அனுமதி. | பெண்களுக்கு எதிரான வன்முறை | கணேசன் RMA |
| 171. | 10.03.09 | **திருநெல்வேலி மாவட்டம் :** இராதாபுரம் தாலுகா, பனங்குடி ராஜகுமாரி என்பவரின் கணவர் சகாயராஜ் மர்மமான முறையில் இறப்பு. தற்கொலை என காவல் துறையினர் வழக்கு பதிவு. | காவல் நிலைய வன்முறை | கணேசன் RMA |
| 172. | 10.03.09 | **திருநெல்வேலி மாவட்டம் :** தென்காசி வட்டம் சம்பார்விகரை கிராமத்தை சேர்ந்த சாலமோன் சேவியர்ராஜ் என்பவர் மீது சம்பவர்கடகரை காவல்துறையினர் பொய் வழக்கு போட்டு சித்திரவதை. | காவல் நிலைய வன்முறை | கணேசன் RMA |
| 173. | 10.03.09 | **திருநெல்வேலி மாவட்டம் :** சங்கரன்கோவில் தாலுகா இருமங்களம், தலித் மக்கள் வசிக்கும் கீழத் தெருவில் ஆதிக்க சாதியினர் அத்துமீறி தாக்குதல் | தலித்துகள் மீதான வன்முறை | கணேசன் RMA |
| 174. | 10.03.09 | **திருநெல்வேலி மாவட்டம் :** சங்கரன்கோவில் தாலுகா விரசிகாமணி, ராமகிருஷ்ணன் என்பவரை தங்கம் மற்றும் முருகன் இழிவாக பேசுதல். காவல் துறையினர் குற்றவாளிகளுக்கு ஆதரவாக | காவல்நிலைய வன்முறை | கணேசன் RMA |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செயல்படுதல். | | |
| 175. | 11.03.09 | **மதுரை மாவட்டம் :** வாடிபட்டி அருகே உள்ள குட்லாடம்பட்யைச் சேர்ந்த பிரம்மாண்டி மகள் பகவதி (17). இதே ஊரைச் சேர்ந்த துரைச்சாமி மகள் ராஜேஸ்வரன் (22) இருவரும் காதலித்து வந்தனர். இந்நிலையில் ராஜேஸ்வரன் திருமணம் செய்து கொள்தவாக கூறி ஏமாற்றியுள்ளார். இது குறித்து சமயநல்லூர் காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 176. | 11.03.09 | **மதுரை மாவட்டம் :** மேலூர் அருகே உள்ள மேலவளவு காந்திநகர் காலணியை சேர்ந்த கக்கன் மகன் கார்த்திக் (22) இருவரும் காதலித்து வந்தனர். இரு குடும்பத்தினரிடையே கடும் எதிர்ப்பு மீறி திருமணம் செய்து கொண்டனர். கார்த்திக் தந்தை கார்த்திக்கை கடத்திச் சென்றதாக சித்திரைசெல்வி மேலூர் டி.எஸ்.பியிடம் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 177. | 11.03.09 | **மதுரை மாவட்டம் :** உசிலம்பட்டி அருகே உள்ள ஆரியபட்டி இவ்வூரைச் சேர்ந்த ஈஸ்வரன் மனைவி பஞ்சவர்ணம். இவர் அதே பகுதியில் உள்ள அங்குசாமி என்பவரது காளவாசல் பணி செய்து வந்தனர். மணி கூலி கொடுப்பது தொடர்பாக் இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. அப்போது பஞ்சவர்ணத்தை சாதிய ரீதியாக திட்டியதாக அங்குசாமி மீது உசிலம்பட்டி போலீசில் புகார். | தலித்துகள் மீதான வன்முறை | தினமலர் |
| 178. | 11.03.09 | **திருநெல்வேலி மாவட்டம் :** புளியங்குடி மாநகராட்சி சிந்தாமணியில் உள்ள வேளாண்மை கூட்டுறவு ரேசன் கடையில் அரிசி எடை குறைவாக வழங்கப்பட்டதை பொது மக்கள் முற்றுகையிட்டனர். | முறைகேடு | தமிழ்சுடர் |
| 179. | 11.03.09 | **சிவகங்கை மாவட்டம் :** சிவகங்கை தாலுகா பாசாங்கரையில் பனை மரங்கள் உள்ளது. பாசாங்கரை சேர்ந்த கரடதிருமகள் மனைவி பொன்னம்மாள் (42) கள் குடித்து குடித்த இடத்திலேயே இறந்தார். அவருடைய மகன் லட்சுமணன் உயிர் ஊசல். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்சுடர் |
| 180. | 11.03.09 | **விருதுநகர் மாவட்டம் :** ராஜபாளையம் அருகே மகளிர் குழு தலைவி தவம்பெற்ற நாயகி (36) இவர் பஸ்சில் சென்ற போது இவருக்கு பின்னால் நின்ற போலீஸ்காரர் ரவிக்குமார் கிருஷ்ணாபுரம் காவல் நிலையத்தில் பணி புரிகிறார். இவர் பாலியல் சில்மிசம். இது குறித்து சேத்தூர் காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்ஓசை |
| 181. | 11.03.09 | **கன்னியாகுமரி மாவட்டம் :** தேங்காய்பட்டணம் அருகே பரக்கான் பகுதியைச் சேர்ந்த பாபுவின் மகன் சூரணா (12). இவர் உறவினர் மஞ்சு என்பவருடன் பைங்குளம் கூட்டுறவு வங்கி அருகே நடந்து வந்தார். அப்பகுதியைச் சேர்ந்த ஆனந்த் (21) கேலி செய்துள்ளார். இது குறித்து புதுக்கடை காவல் நிலைய ல் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்ஓசை |
| 182. | 11.03.09 | **வேலூர் மாவட்டம் :** புவியியல் மற்றும் சுரங்கத்துறை உதவி புவியலர்கள் குருசாமி மற்றும் அதிகாரிகள் தென்னத்தியாம் பகுதியில் மணல் திருட்டு தடுப்பு | மணல் கடத்தல் | தமிழ்ஓசை |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | சுற்றுக் காவல் பணியில் ஈடுபட்டிருந்த போது இசைவின்றி மணல் கடத்தி சென்ற சரக்குந்தை பறிமுதல் செய்தனர். | | |
| 183. | 11.03.09 | **சேலம் மாவட்டம் :** செட்டிகாடு கிராமத்தை சேர்ந்தவர் முருகேசன். இவரது மனைவி இந்திராணி. இவர்களுக்கு மணிகண்டன் (11) என்ற மகனும், பழனியம்மாள் (90 என்ற மகளும் உள்ளனர். பழனியம்மாள் இவரது பக்கத்து வீட்டை சேர்ந்த விவசாயி செல்வம் என்பவர் பாலியல் பலாத்காரம் செய்து கொலை செய்துள்ளார். இது குறித்து பூலாம்பட்டி காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | |
| 184. | 11.03.09 | **கடலூர் மாவட்டம் :** மங்களூர் கின்னகோலி அருகில் உள்ள எல்லஞ்சி முத்தூர் என்ற பகுதியைச் சேர்ந்தவர் ஜெயா. டெம்போ டிரைவர் இவருடைய மகள் அஸ்வினிகுலால் இவரை சலிம் என்பவர் கடத்தி சென்று பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டதாக மாணவி தற்கொலை செய்து கொண்டார். இது குறித்து எம் முல்யாமுள்கி போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்ஓசை |
| 185. | 11.03.09 | **சென்னை மாவட்டம் :** குரோம்பேட்டை அஸ்தினாபுரம் விரோமாஜி நகரைச் சேர்ந்தவர் ஸ்ரீதர் (41) கார் டிரைவர். இவரது மனைவி கோமளா. இவர்களுக்கு இரண்டு மகள்கள். கணவன் மனைவி இடையே ஏற்பட்ட சண்டையில் மகள் மற்றும் மாமியார் தடுத்ததால் இருவரையும் கிணற்றில் தள்ளினார். இது குறித்து ------------------போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்ஓசை |
| 186. | 11.03.09 | **சென்னை மாவட்டம் :** சாலிகிராமம் காந்தி தெருவில் வசிப்பவர் ராஜா முகமது சினிமா உதவி டைரக்டராக உள்ளார். இவரது மனைவி ரம்ஜான்பேகம் (28) கணவன் மனைவி இடையே ஏற்பட்ட பிரச்சனையில் ரம்ஜான்பேகம் தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டார். இது குறித்து வடபழனி போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | |
| 187. | 11.03.09 | **புதுக்கோட்டை மாவட்டம் :** பட்டுக்கோட்டை அருகேயுள்ள மதுக்கூர் போலீஸ் சரகம் சொக்கனாவூரைச் சேர்ந்தவர் முருகானந்தம். இவரது மவைி ராணி. முருகானந்தம் ஈழத்தமிழர் விவகாரத்திற்காக தீக்குளித்ததாகவும் இவர் குடும்ப பிரச்சனையில் தீக்குளித்தார் போலீசார் வழக்கு பதிவு செய்துள்ளார்கள். போலீசார் திசை திருப்பும் விதமாக நடந்து கொள்வதாக பழ. நெடுமாறன் குற்றம் சாட்டியுள்ளார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | |
| 188. | 11.03.09 | **திருவாரூர் மாவட்டம் :** திருவாரூர் அருகே உள்ள திருமக்கோட்டை தெற்கு தென்பகுதியைச் சேர்ந்தவர் மதியழகன்.இவரது மனைவி மகாலட்சுமி (28) சம்பவத்தன்று இவர் அதே ஊரைச் சேர்ந்த ராஜேந்திரன் என்பவரிடம் செல்போனில் பேசிக் கொண்டிருந்தார். இதைக் கண்ட ராஜேந்திரன் மனைவி செந்தாமரை மகாலட்சுமியை தாக்கினார். இதுகுறித்து திருமக்கோட்டை போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| 189. | 11.03.09 | **நாகப்பட்டினம் மாவட்டம் :** திருவெண்காடு புதுத்துறை மேல்பாதி கிராமத்தைச் சேர்ந்தவர் பன்னீர். விவசாயி. இவரது மனைவி பரிமளா. இவருக்கும் பக்கத்து வீட்டைச் சேர்ந்த கலியபெருமாள் (43) என்பவருக்கும் குப்பை கொட்டுவது தொடர்பாக தகராறில் கலியபெருமாள் கொலை மிரட்டல் விடுத்துள்ளார். இது குறித்து திருவெண்காடு போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | |
| 190. | 11.03.09 | **புதுக்கோட்டை மாவட்டம் :** பட்டுக்கோட்டை அருகேயுள்ள தம்பிக்கோட்டை வடகாடு பகுதியைச் சேர்ந்தவர் வடிவேல். இவரது மகள் நிரோஜா (21) இவரது தூரத்து உறவினர் மாயக்கண்ணன். திருமணம் ஆசைக் காட்டி நிரோசாவை பாலியல் பலாத்காரம் செய்துள்ளார். இது குறித்து பட்டுக்கோட்டை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | |
| 191. | 11.03.09 | **நாகப்பட்டினம் மாவட்டம் :** கீழ்தாடகை காலனி தெருவைச் சேர்ந்தவர் மாதவன். விவசாய கூலி தொழிலாளர். இவரது மனைவி சுமித்ரா (21). கணவன், மனைவியிடையே ஏற்பட்ட பிரச்சனையில் சுமித்ரா தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டார். இது குறித்து கீழையூர் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை செய்து வருகிறார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | |
| 192. | 11.03.09 | **திருவாரூர் மாவட்டம் :** திருவாரூர் அருகே உள்ள விளமல்முல்லை நகர் பகுதியைச் சேர்ந்தவர் ஜெயபிரகாஷ், இவரது மகள் கீதா (24) இவருக்கும் பட்டுக்கோட்டை சேர்ந்த கோபாலகிருஷ்ணனுக்கும் திருமணம் நடைபெற்றது. இந்நிலையில் கோபாலகிருஷ்ணன் மற்றும் அவரது குடும்பத்தினர் மேலும் வரதட்சணை கேட்டு சித்திரவதை செய்ததாக திருவாரூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | |
| 193. | 11.03.09 | **நாகப்பட்டினம் மாவட்டம் :** வேதாரண்யம் கீழ ஆறுமுககட்டளை பகுதியைச் சேர்ந்தவர் பொன்னன் விவசாயி. இவரது மகள் சித்ரா (32) இவருக்கு மனநோய் இருந்து வந்ததாக கூறுகிறார். சித்ராவை திருத்துறைப்பூண்டி அருகே உள்ள குன்னலூர் கிராமத்தைச் சேர்ந்த அம்பிகாபதி (42) என்வருக்கு இரண்டாவதாக திருமணம் செய்து வைத்தனர். இந்நிலையில் சித்ரா திருமணம் ஆன 13 நாட்களில் தீக்குளித்து இறந்தார். இது குறித்து வேதாரண்யம் போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | |
| 194. | 11.03.09 | **நாகப்பட்டினம் மாவட்டம் :** புதுப்பட்டினம் ஊராட்சி மன்ற தலைவியாக இருந்து வருபவர் கற்பகம். இவரை அவதூறாக பேசி கொலை மிரட்டல் விட்டதாக பொன்னுசாமி என்பவர் மீது புதுப்பட்டினம் போலீசிர் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | |
| 195. | 11.03.09 | **தஞ்சாவூர் மாவட்டம் :** குடந்தை அருகே கொத்தன்ஒன்றை தெருவைச் சேர்ந்தவர் பாஸ்கர். கூலித் தொழிலாளி. இவரது மனைவி உஷா (20). இவர் | பெண்களுக்கு எதிரான வன்முறை | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | குளித்து கொண்டிருக்கும் போது அதே பகுதியை சேர்ந்த ராமமூர்த்தி என்பவர் எட்டி பார்த்து ரகளை. இது குறித்து மேற்கு போலீசார் வழக்கு பதிவு. | | |
| 196. | 11.03.09 | **தஞ்சாவூர் மாவட்டம் :** குடந்தையை அடுத்த புளியம்பேட்டையை சேர்ந்தவர் ராதாகிருஷ்ணன். இவரது மகள் தனலட்சுமி (29). இவருக்கும் திருகாட்டுப்பள்ளியை அடுத்த ஒன்பத்துவேலியை சேர்ந்த கார்த்திகேயன் என்பவருக்கும் திருமணம் நடந்தது. இந்நிலையில் கார்த்திக்கேயன் மற்றும் அவரது குடும்பத்தினர் மேலும் வரதட்சணைக் கேட்டு கொடுமைப்படுத்தியதால் மனமுடைந்த தனலட்சுமி தற்கொலை செய்து கொண்டார். இது குறித்து திருக்காட்டுப்பள்ளி போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | |
| 197. | 11.03.09 | **திருவாரூர் மாவட்டம் :** நன்னிலம் போலீஸ் சரகம் வீரபாடியைச் சேர்ந்தவர் வேலாயுதம். விவசாயி இவரது மனைவி மாதவி. இவர்களுக்கு 28.04.08 அன்று திருமணம் நடைபெற்றது. இந்நிலையில் வேலாயுதம் மோட்டார் சைக்கிள் பணம் கேட்டு மாதவியை அரிவாளால் வெட்டினார். இது குறித்து நன்னிலம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | |
| 198. | 11.03.09 | **நாகப்பட்டினம் மாவட்டம் :** திட்டச்சேரி அருகே உள்ள வாழமங்கலம் திருமலைராயர்பட்டினம் செல்லும் வழியில் வெள்ளி மேட்டுத்திடலை ஒட்டி செங்கல் ஆலை உள்ளது. அங்கு ஒரு பெண்ணின் உடல் அழுகிய நிலையில் காணப்பட்டது. இது குறித்து நாகை டி.எஸ்.பி வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | |
| 199. | 11.03.09 | **நாகப்பட்டினம் மாவட்டம் :** கொள்ளிடம் அருகே உள்ள ஆலக்குடி பண்டாரவடை தெருவைச் சேர்ந்தவர் இளையராஜா (29) அதே தெருவைச் சேர்ந்தவர் முத்துலட்சுமி (55) என்பவருக்கும் தகராறு ஏற்பட்டது. முத்துலட்சுமியை இளையராஜா கல்லால் தாக்கினார். இது குறித்து கொள்ளிடம் போலீசார் வழக்கு பதிவு. | பெண்களுக்கு எதிரான வன்முறை | |
| 200. | 11.03.09 | **நாகப்பட்டினம் மாவட்டம் :** திருவிழத்தூர் கவித்தெருவைச் சேர்ந்தவர் காமாட்சி (55) இவரது கணவர் இறந்து விட்டதால் சக்திவேல் என்பவரை இரண்டாவதாக திருமணம் செய்து கொண்டார் மற்றும் இவரது அண்ணன் கண்ணன் சொத்து தகராறில் கண்ணன் காமாட்சியை வெட்டினார். இது குறித்து மயிலாடுதுறை போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | |
| 201. | 11.03.09 | **நாகப்பட்டினம் மாவட்டம் :** மயிலாடுதுறை அருகே பாண்டூர் புத்தகத்தை சேர்ந்தவர் கலியமூர்த்தி (55) இவரது மனைவி செல்வி (48) இவர்களின் மகள் சுந்தர் (25) அம்மு (எ) ராஜாமணி ஒரு வருடத்திற்கு முன் காதலித்து திருமணம் செய்து கொண்டார். இந்நிலையில் சுந்தரின் பெற்றோர் அம்முவிடம் வரதட்சணைக் கேட்டு கொடுமைப்படுத்தியுள்ளார். இதனால் மனமுடைந்த அம்மு தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டார். இது குறித்து குத்தாலம் போலீசில் | பெண்களுக்கு எதிரான வன்முறை | |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | புகார். | | |
| 202. | 11.03.09 | **நாகப்பட்டினம் மாவட்டம் :** மயிலாடுதுறை அருகே உள்ள முழையூர் மேலத்தெருவை சேர்ந்தவர் கோவிந்தன். இவரது மனைவி லட்சுமி. இவரது மகள் ரேவதி (20) பெற்றோர்களுடன் ஏற்பட்ட தகராரின் காரணமாக மகள் ரேவதி தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டார். இது குறித்து மயிலாடுதுறை போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | |
| 203. | 11.03.09 | **நாகப்பட்டினம் மாவட்டம் :** செம்பனார்கோட்டை அடுத்த இடாரன்கொண்டார் கிராமத்தைச் சேர்ந்தவர் மகேஷ் (32) இவரதுமனைவி வசந்தா. கணவன், மனைவியிடையே ஏற்பட்ட தகராறில் மகேஷ் வசந்தாவை அரிவாளால் வெட்டியுள்ளர். இது குறித்து செம்பனார்கோவில் போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | |
| 204. | 11.03.09 | **நாகப்பட்டினம் மாவட்டம் :** மாமாதம்பி மரைக்காயர் வீதியைச் சேர்ந்தவர் ஹாஜாநஜீமுதின் இவர் பிரான்சில் பணியாற்றி வருகிறார். இவரது மனைவி ரிஸ்வானாபேகம் (27) இவர்களுக்கு 2 குழந்தைகள் உள்ளனர். கடந்த 9 மாதங்களாக வீட்டுக்கு பணம் அனுப்பாததால் வீட்டில் தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டார். இது குறித்து காரைக்கால் நகர காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | |
| 205. | 11.03.09 | **நாகப்பட்டினம் மாவட்டம் :** வேதாரண்யம் அருகே காரியாப்பட்டினத்தில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளி ஆண்டு விழா நிகழ்ச்சி ஒத்திகையில் ஈடுபட்டிருந்த போது சில மாணவர்கள் கல் வீசினர். அப்போது ஆசிரியர் பாலுச்சாமி என்பவர் வினோத்திடம் விசாரிக்கும் போது கையால் தாக்கினார். மூக்கு உடைந்தது. இது குறித்து கரியாப்பட்டினம் போலீசில் புகார். | வகுப்பறை வன்முறை | |
| 206. | 11.03.09 | **கடலூர் மாவட்டம்:** பண்ருட்டி அருகே சின்ன எலந்தப்பட்டு கிராமத்தைச் சேர்ந்த சங்கர் மகள் சந்தியா குமார் மகள் அமலா பட்டுசாமி மகள் இலக்கியா, முருகன் மகள் சத்யபிரியா ஆகிய நான்கு மாணவிகளும் பெற்றோர்கள் திட்டியதால் மனமுடைந்து அரளி விதையை அரைத்து சாப்பிட்டனர். இது குறித்து புதுபேட்டை போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். | குழந்தைகளுக்கு எதிரான வன்முறை | |
| 207. | 11.03.09 | **கடலூர் மாவட்டம் :** பண்ருட்டி அருகே வீரப்பர் கிராமத்தைச் சேர்ந்தவர் ஏழுமலை மகன் குமார் (28) இவர் செங்கல் சூளைக்கு ஆள் அனுப்பும் மேஸ்திரியாக உள்ளார். இவருக்கும் பிச்சைகாரன் (29) என்பவனுக்கும் பணத் தகராறு ஏற்பட்டுள்ளது. அவரைகுமார் காரில் கடத்தி சென்றார். இது குறித்து பண்ருட்டி போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | |
| 208. | 12.03.09 | **மதுரை மாவட்டம் :** மதுரை சாமந்தகம் பகுதியைச் சேர்ந்தவர் ராதாகிருஷ்ணன். இவருக்கும் அதே பகுதியைச் சேர்ந்த தீபா (21) என்பவருக்கும் கடந்த 8ந் | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தேதி திருமணம் நடந்தது. தீபாவுக்கு திருமணத்தில் உடன்பாடு இல்லை. மனமுடைந்த தீபா விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்டார். | | |
| 209. | 12.03.09 | **மதுரை மாவட்டம் :** மேலூர் அருகே உள்ள வயிரவன் பட்டியைச் சேர்ந்தவர் சரவணன். இவருக்கும் மீனா (21) இவர்களுக்கு 7 மாதக் குழந்தை உள்ளது. இந்நிலையில் மீனாவிடம் மேலும் வரதட்சணைக் கேட்டு துன்புறுத்தப்பட்டு தாய் வீட்டிற்கு விரட்டப்பட்டார். குழந்தையை வலுக்கட்டாயமாக கணவர் வீட்டார் அழைத்துச் சென்றார். இது குறித்து மேலூர் போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 210. | 12.03.09 | **மதுரை மாவட்டம் :** மதுரை அனுப்பானடி ஹவுசிங் போர்டு காலனியைச் சேர்ந்தவர் மேரி. இவரது மகள் மரியா (20) இவர் அப்பகுதியில் உள்ள தனியார் பள்ளியில் 5ம் வகுப்பு படித்து வருகிறார். அரசு விடுமுறை நாளில் பள்ளிக்கு வரச்சொல்லி ஆசிரியர் ராணி தாக்கியதில் மாணவி மரியா கைகளில் காயம். இது குறித்து அவனியாபுரம் போலீசில் புகார். | வகுப்பறை வன்முறை | தினகரன் |
| 211. | 12.03.09 | **தூத்துக்குடி மாவட்டம் :** தூத்துக்குடியைச் சேர்ந்த விஜய் ஆனந்த் (33) இவரது சகோதரர் விமல்ஆனந்த் மற்றும் உறவினர் சந்தானராஜ் ஆகியோர் அந்தமான் தீவில் நடந்த கொலை வழக்கு தொடர்பாக இவர்கள் இருவரும் அந்தமான் சிறையிலுள்ளனர். இவர்களை தூத்துக்குடி போலீசார் என்கவுண்டரை தடுத்த நிறுத்த கோரி மதுரை ஐகோர்ட் கிளையில் ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டது. | காவல் நிலைய வன்முறை | தினமலர் |
| 212. | 12.03.09 | **மதுரை மாவட்டம் :** மேலூர் கொட்டகுடியைச் சேர்ந்தவர் பழனியப்பன் இவருக்கும் மேலூரைச் சேர்ந்த செல்வி (21) திருமணம் நடந்தது. செல்லத்திடம் கூடுதல் வரதட்சணைக் கேட்டு துன்புறுத்தியதாகவும் மற்றும் கொடுமைப்படுத்தியதாகவும் தீக்குளிக்க முயற்சி. இது குறித்து மேலூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 213. | 12.03.09 | **சேலம் மாவட்டம் :** ஆத்தூர் அருகே உள்ள சர்வாய் புதூரில் அரசு உயர்நிலைப்பள்ளியின் மாணவிகளிடம் ஆத்தூர் புத்திர–கவுண்டன்பாளையம் தனியார் கல்வியல் கல்லூரியில் படித்த தலைவாசல் நரவக்குறிச்சி வடக்குத் தெருவைச் சேர்ந்த சேகர் (33) மாணவிகளிடம் செக்ஸ் டார்ச்சர் கொடுத்ததாக தலைவாசல் போலீஸ் நிலையத்தில் புகார். | வகுப்பறை வன்முறை | |
| 214. | 12.03.09 | **திண்டுக்கல் மாவட்டம் :** வத்தலகுண்டு அருகே பட்டிவீரன்பட்டியில் பொது மக்களுக்கு இடைஞ்சலாக உள்ள அரசு டாஸ்மார்க் மதுபானக் கடையை அகற்றுமாறு தமிழக முதல்வருக்கு அனைத்து வியாபாரிகள் சங்கத்தினர் மனு. | பொது தகவல் | |
| 215. | 12.03.09 | **விருதுநகர் மாவட்டம் :** காரியாப்பட்டி அருகில் உள்ள வெற்றிலை முருகன்பட்டி கிராமத்தில் ஆதிக்க சமூகத்தினர் தலித் மக்கள் மீது தாக்குதல் நடத்தினர். இதனால் பலர் படுகாயமடைந்தனர். காவல்துறையினர் | தலித்துகள் மீதான வன்முறை. | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பாதிக்கப்பட்ட தலித் மக்கள் மீதே வழக்கு போட்டனர். இதனை கண்டித்து சி.பி.எம். கட்சியினர் கண்டனம். | | |
| 216. | 12.03.09 | **சேலம் மாவட்டம் :** எடப்பாடி ஆவணிப்பேரூர் கீழ்முகம் கிராமத்தில் சங்ககிரி ஆதிதிராவிடர் நலத்துறை வட்டாட்சியர் மூலம் வழங்கப்பட்ட பட்டாவை கொண்டு அங்கு 130 குடும்பங்கள் வீடு கட்டி வாழ்ந்து வருகின்றனர். தங்களுக்கு சொந்தமாக்கி கொள்ள ஒரு சில தனி நபர்கள் அரசு அதிகாரிகள் துணையுடன் இணைந்து செய்து வருகிறார்கள். | தலித்துகள் மீதான வன்முறை | |
| 217. | 12.03.09 | **காஞ்சிபுரம் மாவட்டம் :** சோளிங்கநல்லூரைச் சேர்ந்த விடுதலைப்போராட்ட வீரர் கன்னியப்ப நாயக்கர் என்பவருக்கு கடந்த 1947 ஆம் ஆண்டு அரசு இலவச நிலம் வழங்கியுள்ளது. இந்த நிலத்தை வன்கைபற்றல் செய்தவரிடம் ரூ. 3 லட்சம் கையூட்டு பெற்றதாக வந்த குற்றசாற்று தொடர்பாக விளக்கம் அளிக்க வேண்டும் என செங்கல்பட்டு நீதிபதிக்கு உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி ஆணை. | கையூட்டு | தமிழ்ஓசை |
| 218. | 12.03.09 | **தஞ்சாவூர் மாவட்டம் :** ஒரத்தநாடு வட்டத்தில் உள்ள ஒக்காநாடு மேலையூர் சிற்றூரில் தீண்டாமையை கடைப்பிடித்து வரும் கோவில் அர்ச்சகர் மாணவிகளை வெளியேற்றுகை மறைத்த நாட்டு நலப்பணி திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் மீது நடவடிக்கை எடுக்க கோரி இந்திய மாணவர்கள் சங்கத்தினர் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். | தலித்துகள் மீதான வன்முறை | தமிழ்ஓசை |
| 219. | 12.03.09 | **விழுப்புரம் மாவட்டம் :** மணலூர்கோட்டை அரசு பெண்கள் உயர்நிலைப்பள்ளி அருகே நேற்று முன்தினம் குவியலாக கொட்டி கிடந்த மணலை ஒரு இழுவை ஊர்தியில் ஏற்றினர். இதனை திருக்கோவிலூர் வட்டாட்சியர் சண்முகம் தலைமையில் அதிகாரிகள் விசாரணை நடத்தி ஊர்தியை பறிமுதல் செய்தனர். | மணல் கடத்தல் | தமிழ்ஓசை |
| 220. | 12.03.09 | **திருநெல்வேலி மாவட்டம் :** மேகலிங்கபுரத்தை சேர்ந்த வள்ளிநாயகம் மகள் சுப்புலட்சுமி இவர் நெல்லையில் உள்ள வணிக வளாகத்தில் வேலை பார்த்து வந்தார். அதே கடையில் வேலை பார்க்கும் சங்கருக்கும் காதல் ஏற்பட்டது. திருமணம் செய்து கொள்வதாக கூறி ஏமாற்றினார். இது குறித்து நெல்லை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்ஓசை |
| 221. | 12.03.09 | **வேலூர் மாவட்டம் :** திருப்பத்தூர் அருகே உள்ள வெளக்கல் நத்தம் கிராமத்தைச் சேர்ந்த நடராஜன் என்பவரின் மகன் அருண் (21) இவர் தர்மபுரி மாவட்டம் பாப்பிரெட்டிபட்டி தனியார் பாலிடெக்னிக் கல்லூரியில் முதலாம் ஆண்டு பயின்று வருகிறார். இவர் திடீரென்று விடுதியில் விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்டார். இது குறித்து ஏ. பள்ளிபட்டு போலீசில் புகார். | வகுப்பறை வன்முறை | பாஸ்கர், RMA |
| 222. | 12.03.09 | **வேலூர் மாவட்டம் :** ஆற்காடு அடுத்த தாஜ்புரா ராஜீவ் நகரைச் சேர்ந்தவர் ஏழுமலை (49) கூலி தொழிலாளி. இவரது மகள் உமாதேவி (16) உமாதேவியின் தாய் யாரிடமும் சொல்லாமல் காணாமல் | பெண்களுக்கு எதிரான வன்முறை | பாஸ்கர், RMA |

| | | | | |
|---|---|---|---|---|
| | | போய் விட்டார். இது குறித்து உறவினர்கள் தாயை கேவலமாக பேசியதால் மனமுடைந்த உமாதேவி தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டார். இது குறித்து ஆற்காடு தாலுகா காவல் நிலையத்தில் புகார். | | |
| 223. | 12.03.09 | **வேலூர் மாவட்டம் :** ஆம்பூர் கஸ்பா பகுதியைச் சேர்ந்தவர் கலைமகள். இவர் அப்பகுதியில் உள்ள தனியார் பள்ளியில் +2 படித்து வந்த இவரை மஞ்சு என்பவர் கடத்தி சென்றதாக ஆம்பூர் டவுன் போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | பாஸ்கர், RMA |
| 224. | 12.03.09 | **வேலூர் மாவட்டம் :** திருப்பத்தூர் அடுத்த சின்ன கண்ணாலப்பட்டியைச் சேர்ந்தவர் மகாலிங்கம். இவரது மகள் சத்யா (18) அங்குள்ள தனியார் நர்சிங் கல்லூரியில் பயின்று வந்தார். சம்பவத்தன்று சத்யா கல்லூரி சென்றவர் வீடு திரும்பவில்லை. இது குறித்து சத்யாவின் பெற்றோர் கத்திலி போலீசில் புகார் கொடுத்தனர். புகாரை வாங்க மறுப்புள்ளனர். இந்த வழக்கை திருப்பதூர் தாலுகா போலீஸ் ஸ்டேசனில் கொடுக்க வேண்டும் என்று சொல்லி காவலர்கள் அலைக் கழித்தனர். | பெண்களுக்கு எதிரான வன்முறை | பாஸ்கர், RMA |
| 225. | 12.03.09 | **வேலூர் மாவட்டம் :** பேரணாம்பட்டு பண்டராவாடையை சேர்ந்தவர் சேட்டு சவரத் தொழிலாளி. இவரது மனைவி மஞ்சுளா (30). இவர்களுக்கு பாலாஜி (8), காவ்யா (6) என்று இரண்டு குழந்தைகள் உள்ளனர். கணவன் மனைவியிடையே ஏற்பட்ட பிரச்சனையில் மஞ்சுளா தன் குழந்தைகளுடன் தாய் வீடு சென்றார். மஞ்சுளாவை குடும்பம் நடத்த அழைத்தும் வராததால் தனது இரண்டு குழந்தைகளுக்கும் பிரியாணியில் விசம் கலந்து கொடுத்து விட்டு தானும் சாப்பிட்டார். இது குறித்து பேராணம்பட்டு காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | பாஸ்கர், RMA |
| 226. | 12.03.09 | **வேலூர் மாவட்டம் :** அரக்கோணம் அடுத்த மேட்டு அரும்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்தவர் பிரான்சிஸ் கூலி தொழிலாளி இவருக்கும் கிழாந்துறை கிராமத்தைச் சேர்ந்த மகிமைச்செல்வி (24) என்பவருக்கும் திருமணம் நடந்தது. இவர்களுக்கு ஓர் ஆண் குழந்தை உள்ளது. இந்நிலையில் கூடுதல் வரதட்சணை கேட்டு மகிமைச் செல்வி துன்புறுத்தப்பட்டார். இதனால் மனமுடைந்த மகிமைச்செல்வி தீ வைத்து தற்கொலை செய்து கொண்டார். இது குறித்து அரக்கோணம் தாலுகா காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | பாஸ்கர், RMA |
| 227. | 12.03.09 | **வேலூர் மாவட்டம் :** வேலூர் அடுத்த தாராபடவேக மசூதி தெருவைச் சேர்ந்தவர் நகரூதின் (30) இவருக்கும் அதே பகுதியைச் சேர்ந்த நஸ்ரீன்பானு என்பவருக்கும் சில ஆண்டுகளுக்கு முன்பு திருமணம் நடந்தது. இவர்களுக்கு 2 குழந்தைகள் நஸ்ரீன் பானுவின் நடத்தை சரியில்லாததால் அவரது தாயார் தீ வைத்து கொலை செய்தார். இது குறித்து காட்பாடி டி.எஸ்.பி விசாரணை நடத்தி வருகிறார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | பாஸ்கர், RMA |

| | | | | |
|---|---|---|---|---|
| 228. | 12.03.09 | **வேலூர் மாவட்டம் :** வாலாஜா பெருமாள் கோயில் தெருவைச் சேர்ந்தவர் தனஞ்செழியன் லாரி டிரைவர். அதே பகுதியைச் சேர்ந்த தேவராஜ் மகள் கோமலீஸ்வரி (28) என்பவரை 8 மாதத்திற்கு முன்பு திருமணம் நடந்தது. தனஞ்செழியன் தனது மனைவியின் நடத்தையில் சந்தேகப்பட்டு மனைவி மீது மண்ணெணைய் ஊற்றி எரித்துக் கொலை. இது குறித்து வாலாஜாபேட்டை போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | பாஸ்கர், RMA |
| 229. | 12.03.09 | **வேலூர் மாவட்டம் :** நெமிலி அடுத்த உரிய நல்லூர் வினாயகபுரத்தைச் சேர்ந்தவர் குமரேசன். பால் வியாபாரியான இவர் மாட்டு பண்ணை நடத்தி வருகிறார். இவரது மனைவி அஞ்சலை (எ) கார்த்திகா கணவன், மனைவியால் ஏற்பட்ட பிரச்சனையில் அஞ்சலை தூக்கு மாட்டி தற்கொலை செய்து கொண்டார். இது குறித்து நெமிலி போலீசார் வழக்கு பதிவு. | பெண்களுக்கு எதிரான வன்முறை | பாஸ்கர், RMA |
| 230. | 12.03.09 | **வேலூர் மாவட்டம் :** காட்பாடியில் குடியிருப்பு பகுதி அருகே கள்ளச் சாராயம் விற்பனை நடத்தி வருகின்றன. இதனால் பொதுமக்கள் கலக்கம். | கள்ளச் சாராயம் | பாஸ்கர், RMA |
| 231. | 12.03.09 | **வேலூர் மாவட்டம் :** ராப்புரம் நாகாத்தம்மன் கோயில் தெருவைச் சேர்ந்தவர் ரியாஸ் (35). இவரது மனைவி ஹபீரா (28). இவர்களுக்கு இரண்டு குழந்தைகள். ரியாஸ் குடித்து விட்டு தனது மனைவி ஹபீரா மீது மண்ணெணைய் ஊற்றி கொலை செய்தார். இது குறித்து ராயப்புரம் போலீசார் வழக்கு பதிவு. | பெண்களுக்கு எதிரான வன்முறை | பாஸ்கர், RMA |
| 232. | 12.03.09 | **தூத்துக்குடி மாவட்டம் :** எட்டையாபுரத்தைச் சேர்ந்தவர் செல்வி இவர் மணிமுத்தாறு சிறப்பு முகாம் பிரிவில் போலீசாக உள்ளார். இவருக்கும் தாழையூத்து எஸ்.ஐ செந்தில்குமார் (34) என்பவரும் காதலித்து வந்துள்ளனர். பின்னர் திருமணம் செய்து கொள்வதாக கூறி ஏமாற்றியுள்ளார். இது குறித்து செல்வி தூத்துக்குடி எஸ்.பியிடம் புகார் கொடுத்தார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | |
| 233. | 12.03.09 | **திருவண்ணாமலை மாவட்டம் :** புதுவாணியகுடி 8வது தெருவைச் சேர்ந்தவர் அபிராமி (26) இவரை இவரது பக்கத்து வீட்டில் வசிப்பவர் வேல்முருகன் (26) ஒரு தலையாக அபிராமியை காதலித்து வந்தார். அபிராமியிடம் தன் காதலை சொல்லிய போது எதிர்ப்பு தெரிவித்ததால் அபிராமியை நடுரோட்டில் சரமாரியாக தாக்கினார். இது குறித்து திருவண்ணாமலை டவுன் போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | |
| 234. | 12.03.09 | **திருவண்ணாமலை மாவட்டம் :** தி. மலை அடுத்த மேலத்திகான் கிராமத்தைச் சேர்ந்தவர் மனோகரன். இவரது மகள் சுகன்யா. இவர் 10ம் வகுப்பு படிக்கும் மாணவி. அதே பகுதியைச் சேர்ந்த ஆனந்தகுமார் கடத்தி சென்றுள்ளார். இது குறித்து சுகன்யாவின் பெற்றோர் கேட்ட போது அவர்களை அடித்துள்ளார். இது குறித்து திருவண்ணாமலை தாலுகா போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| 235. | 12.03.09 | **திருவண்ணாமலை மாவட்டம் :** போளூர் ஆவடி தெருவைச் சேர்ந்தவர் முனியம்மா (30) இருவரும் பக்கத்து வீட்டைச் சேர்ந்த கோவிந்தம்மாள் என்பவருக்கும் குழாயில் தண்ணீர் பிடிப்பது சம்பந்தமாக தகராறு ஏற்பட்டது. அப்போது பக்கத்து வீட்டை சேர்ந்த ரவி (30) என்பவர் முனியம்மாளிடம் தகராறு செய்து தகாத வார்த்தைகளால் திட்டினார். இது குறித்து போளூர் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | |
| 236. | 12.03.09 | **திருவண்ணாமலை மாவட்டம் :** போளூர் அடுத்த அலங்கார மண்டலம் கிராமத்தைச் சேர்ந்தவர் நாராயணன் (27) விவசாயி. இவருக்கும் ராந்தம் கிராமத்தைச் சேர்ந்த நாராணயசாமியின் மகள் கண்ணம்மாளுக்கும் திருமணம் நடந்தது. இவர்களுக்கு ஒரு வயதில் பெண் குழந்தை உள்ளது. இந்நிலையில் நாராயணுக்கு வேறு பெண்ணுடன் கள்ளதொடர்பு ஏற்பட்டதால் மனமுடைந்த கண்ணம்மாள் விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்டார். இதுக குறித்து போளூர் காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | |
| 237. | 12.03.09 | **திருவண்ணாமலை மாவட்டம் :** செய்யாறு அடுத்த அத்தி கிராமத்தைச் சேர்ந்தவர் ராஜமாணிக்கம் (40) இவருக்கும் அதே பகுதியைச் சேர்ந்த சக்திவேல் (33) என்பவருக்கும் இடையே நிலம் தொடர்பாக தகராறு இதில் சக்திவேலை உறவினர்கள் ராஜமாணிக்கம் மற்றும் அவரது மகள் விஜயசாந்தியை தாக்கினார். இது குறித்து இரு தரப்பினரும் அகன்காவூர் போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | |
| 238. | 12.03.09 | **திருவண்ணாமலை மாவட்டம் :** செங்கம் அடுத்த தாகப்பாடி கிராமத்தைச் சேர்ந்தவர் காசிநாதன் (58) இவரது மனைவி சரோஜா (52) இவர்களுக்கு 3 மகள். இரண்டு மகள்களுக்கு திருமணம் ஆனது. கடைசி மகள் சுதா (17) இந்நிலையில் சுதாவின் பெற்றோர் உடல்நிலை பாதிக்கப்பட்டது. அவர்களை யாரும் கவனிக்கவில்லை. இதனால் மனமுடைந்த சுதா விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்டார். இது குறித்து செங்கம் போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | |
| 239. | 13.03.09 | **மதுரை மாவட்டம் :** மதுரை கீழவெளி வீதியைச் சேர்ந்த ரகமதுல்லா (44). இவர் பாஸ்போர்ட் கோரி விண்ணப்பித்தவர் மீது வெடி பொருட்களை கையாண்டதாக வழக்கு பதிவு. மதுரை உயர் கிளை நீதிமன்றத்தில் புகார். | காவல் நிலைய வன்முறை | |
| 240. | 13.03.09 | **தூத்துக்குடி மாவட்டம் :** அண்ணாநகரை சேர்ந்தவர் யோவான். இவரது மகள் செல்வலட்சுமி (21) மற்றும் அதே பகுதியை சேர்ந்த தங்கவேலுக்கு திருமணம் நிச்சயிக்கப்பட்டு 01.02.09 அன்று திருமணம் நடந்ததாக கூறினார். இந்நிலையில் தங்கவேலை கடத்தி சென்றதாக செல்வலெட்சுமி மதுரை ஐகோர்ட் கிளையில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | |
| 241. | 13.03.09 | **காஞ்சிபுரம் மாவட்டம் :** ஓழலூர் ஊராட்சியில் 25 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலம் இருந்தும் பள்ளிகூடம் | தலித்துகள் மீதான | |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | கட்ட அனுமதி மறுக்கப்படுவதாகவும், சாதியின் அடிப்படையில் காங்கிரஸ் பிரமுகருக்கு அரசு அதிகாரிகள் துணைபோவதாகவும் இது குறித்து தலித் பெண் ஊராட்சி தலைவர் ஈஸ்வர் பத்திரிகையில் புகார். | வன்முறை | |
| 242. | 13.03.09 | **சென்னை மாவட்டம் :** மடிபாக்கம் பகுதியைச் சேர்ந்த 17 வயது சிறுவனுக்கு 14 வயது சிறுமிக்கும் வலுக்கட்டாயமாக திருமணம் நடத்தியதாக தெற்கு கமிஷனர் எஸ்.ஆர். ஜாங்கிட்டிடம் புகார். | குழந்தை திருமணம் | |
| 243. | 13.03.09 | **இராமநாதபுரம் மாவட்டம் :** பாண்டியூர் அருகே இரு பிரிவினரிடையே ஏற்பட்ட பிரச்சனையில் பாண்டியூர் காவலர்கள் தலித் மக்கள் மீது தாக்குதல். | தலித்துகள் மீதான வன்முறை | |
| 244. | 13.03.09 | **திருவண்ணாமலை மாவட்டம் :** ஆரணி அடுத்த மொரப்பந்தாங்கல் கிராமத்தைச் சேர்ந்தவர் மஞ்சுளா (22) இவர் தனது வீட்டு முன் டீக்கடை நடத்தி வருகிறார். அதே பகுதியைச் சேர்ந்த பிரகாஷ் என்பவர் மஞ்சுளாவை ஆபாசமாக பேசியதோடு கையால் தாக்கினார். இது குறித்து ஆரணி தாலுகா காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | |
| 245. | 13.03.09 | **சென்னை மாவட்டம் :** கும்மிடிப்பூண்டியை அடுத்த பாதிரிவேடு அருகே உள்ள வாணியம்பாடி கிராமம். இங்கு வசித்து வருபவர் சாம்பசிவம். இவரது மகள் கீதா (20) அதே பகுதியைச் சேர்ந்த கிரிபாவும் (25) காதலித்து வந்தனர். இவரை திருமணம் செய்து கொள்வதாக கூறி ஏமாற்றி கர்ப்பமாக்கியுள்ளார். இது குறித்து பாதிரிவேடு காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | டைட்டி, RMA |
| 246. | 13.03.09 | **சென்னை மாவட்டம் :** திருக்கழுக்குன்றம் அருகே உள்ள ஜாகீர் உசேன் தெருவை சேர்ந்தவர் இஸ்மாயில் (25) இவருக்கு திருமணமாகி ஒரு குழந்தை உள்ளது. அதே பகுதியைச் சேர்ந்த நிசாரின் மகள் மகபீவிக்கும் காதல் ஏற்பட்டு திருமணம் செய்து கொள்வதாக கூறி கர்ப்பினியாக்கிவிட்டு திருமணம் செய்ய மறுத்து விட்டார். இது குறித்து மாமல்லபுரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | டைட்டி, RMA |
| 247. | 13.03.09 | **காஞ்சிபுரம் மாவட்டம் :** புத்தேரி கிராமத்தில் வசிக்கும் அம்மு (எ) எஸ்தர்ராணி வீட்டில் பாத்திரம் கழுவிக் கொண்டிருந்த போது திடீரென்று மயங்கி விழுந்தார். இதனால் அவரை காஞ்சிபுரம் அரசு மருத்துவமனையில் அனுமதித்தனர். அப்போது அங்கு பணியில் இருந்த நர்ஸ் உடனடியாக சிகிச்சை அளிக்கவில்லை பெண்ணின் உறவினர் ஸ்டாலின் வாக்குவாதம் செய்து நர்சை தாக்கினார். இதுகுறித்து சின்னகாஞ்சிபுரம் போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | டைட்டி, RMA |
| 248. | 13.03.09 | **சென்னை மாவட்டம் :** ஏழுகிணறு வெங்கட்ராமன் தெருவைச் சேர்ந்தவர் சேக் ஸ்டேட் வங்கி ஊழியர். இவரது மனைவி துளசி. இவர்களது வீட்டின் ஒரு போர்ஷனில் வாடகைக்கு வசிப்பவர் கிருஷ்ணமூர்த்தி இவரது மனைவி சுமதி சேகரிடம் சகஜமாக பழகியுள்ளார். இதை துளசி தவறாக புரிந்து கொண்டு சுமதியிடம் தகராறு செய்ததாக ஏழுகிணறு போலீசில் | பெண்களுக்கு எதிரான வன்முறை | டைட்டி, RMA |

| | | | | |
|---|---|---|---|---|
| | | புகார். இதில் விசாரணைக்காக சுமதி 6 மணிக்கு மேல் விசாரணைக்கு சென்று வீடு திரும்பிய சுமதி தூக்கு போட்டு தற்கொலை செய்து கொண்டார். | | |
| 249. | 13.03.09 | **சென்னை மாவட்டம் :** ஆவடி அடுத்த கரிமேடு அண்ணாநகர் பகுதியைச் சேர்ந்தவர் அறிவழகன் (28) அம்பத்தூரில் உள்ள தனியார் செல்போனில் ஏஜென்சியில் வேலை செய்கிறார். இவரது மனைவி ஈஸ்வரி இவர்களுக்கு 7 மாதக் கைக் குழந்தை உள்ளது. இவரை விட்டுவிட்டு கள்ளக்காதலி லினா (20) என்பவருடன் குடும்பம் நடத்தியதாக முத்தா புதுக்பேட்டை போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | டைட்டி, RMA |
| 250. | 13.03.09 | **சென்னை மாவட்டம் :** ஆவடி அடுத்த பட்டாபிராம் சக்கள்ஜிநகர் மாடல் தெருவைச் சேர்ந்தவர் தேவராஜ். இவரது மனைவி காஞ்சனா (36). இவர்களது பக்கத்து வீட்டில் வசிப்பவர் கோகுலகண்ணன் (24) அவரது மனைவி அபிராமி (22) வீட்டின் முன்பு கோலம் போடுவது தொடர்பாக அபிராமிக்கும் காஞ்சனாவுக்கும் அடிக்கடி ஏற்பட்ட தகராறில் அபிராமி மற்றும் அவரது உறவினர்கள் மூலம் காஞ்சனாவை தாக்கியுள்ளார். இதுகுறித்து பட்டாபிராம் போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | டைட்டி, RMA |
| 251. | 13.03.09 | **கடலூர் மாவட்டம் :** சிதம்பரம் அடுத்த கஸ்பா ஆலம்பாடி கிராமத்தைச் சேர்ந்தவர் கோபாலகிருஷ்ணன் மனைவி கற்பகம் (210. இவரது எதிர் வீட்டில் வசிப்பவர் ராமலிங்கம் மகன் சுதாகர் (27) சுதாகர் கற்பகத்திடம் தவறாக நடக்க முயற்சி செய்து வந்ததாக உள்ள நிலையில் சம்பவத்தன்று சுதாகர் கற்பகத்திடம் தகராறு செய்துள்ளார். இது குறித்து மருதூர் போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | டைட்டி, RMA |
| 252. | 13.03.09 | **கடலூர் மாவட்டம் :** கடலூர் அரசு மருத்துவமனையில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு பண்ரூட்டி அடுத்த கழும்பூரை சேர்ந்த சினேகா என்பவரை தாக்கி அவரது குழந்தை கடத்தப்பட்டது. இது குறித்து இன்ஸ்பெக்டர் கண்ணபிரானுக்கும் இவ்வழக்கில் தொடர்புள்ளது என்று கண்டறியப்பட்டது இவர் மீது தேவனாம்பட்டு பட்டினம் காவல் நிலையத்தில் 3 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு சஸ்பெண்ட் செய்யப்பட்டார். | குழந்தைகளுக்கு எதிரான வன்முறை | ஜெயராம், RMA |
| 253. | 13.03.09 | **கடலூர் மாவட்டம் :** பரங்கிபேட்டை அருகே உள்ள தீன்னூர் கன்னிகோயில் பகுதியைச் சேர்ந்தவர் அய்யாசாமி மகன் மகாதேவன் (39) கூலி தொழிலாளி. இவர் ஊரில் ஏற்பட்ட சிறு பிரச்சனை தொடர்பாக ஊர் பஞ்சாயத்தினர் சேர்ந்து ஊரை விட்டு ஒதுக்கி வைத்தனர். இது தொடர்பாக பரங்கிமலை நீதிமன்றத்தில் புகார். | சமூக புறக்கணிப்பு | ஜெயராம், RMA |
| 254. | 14.03.09 | **தேனி மாவட்டம் :** பெரியகுளம் பெருமாள்புரத்தைச் சேர்ந்த கூலி தொழிலாளி பாண்டியன் (30) இவரது மனைவி மீனா (19) இவர்களுக்கு திருமணமாகி 8 மாதங்கள் ஆகிறது. இந்நிலையில் மீனா மர்மமான முறையில் இறந்தார். இது குறித்து போலீசார் வழக்கு | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்சுடர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பதிவு செய்து விசாரணை நடத்து வருகின்றனர். | | |
| 255. | 14.03.09 | **சிவகங்கை மாவட்டம் :** சிவகங்கை தாலுகா கொன்னாம்பட்டியைச் சேர்ந்த ரவி மனைவி தனலெட்சுமி (20) குடும்ப பிரச்சனை காரணமாக தீக்குளித்து தற்கொலை. இது குறித்து சிவகங்கை தாலுகா காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்சுடர் |
| 256. | 14.03.09 | **திருநெல்வேலி மாவட்டம் :** கொலை வழக்கில் கைதானவர்கள் சிறையில் உள்ள ரவுடிக் கைதிகளை கத்தியால் குத்தியதில் ஒருவருக்கு முதுகில் தையல் போட்டுள்ளனர். | காவல் நிலைய வன்முறை | தினமலர் |
| 257. | 14.03.2009 | **செங்கல்பட்டு மாவட்டம் :** நடுவன்மேடு கிராமம் பிள்ளையார் கோவில் தெருவில் வசிப்பவர் ஞானசேகர் மனைவி ஜெயலட்சுமி (23). இவரை இரண்டாவது பிரசவத்திற்கு GHல் சேர்த்துள்ளனர். அங்கு மருத்துவர் அலட்சியத்தால் இறந்துவிட்டார். உறவினர்கள் உடலை வாங்க மறுத்து சாலை மறியலில் ஈடுபட்டனர். மருத்துவ ஊழியர்கள் 5 பேர் சஸ்பெண்ட். போலீஸ், RDO லிவாரணை | மருத்துவர் அலட்சியம் | |
| 258. | 14.03.2009 | **திருவள்ளூர் மாவட்டம் :** பொன்னேரியில் வாடகை வீட்டில் வசித்து வந்தவர் வெங்கடேசன்., இவருக்கு ஏற்கனவே முதல் திருமணம் நடைபெற்றது. இரண்டாவதாக மீஞ்சூர் தேரடித் தெரு ராஜா என்பவரின் மகள் எல்லம்மாளைத் திருமணம் செய்து கொண்டார். இருவருக்கும் ஏற்பட்ட தகராறில் மனைவியை எரித்துக் கொலை. போலீசில் புகார். விசாரணை | பெண்களுக்கு எதிரான வன்முறை | |
| 259. | 14.03.2009 | **சென்னை மாவட்டம்:** ஆவடி ஆரிக்கம்பேடு அம்மன்கோவில் தெரு அருணாச்சலம் (55). இவர் வெள்ளலூர் ஊராட்சி மன்றத் தலைவர். திருமுல்லை வாயில் சிட்கோ தொழிற்பேட்டை பகுதியில் திருட்டுத்தனமாக மணல் அள்ளுவதை அருணாச்சலம் கண்டித்தார். அதற்கு டும்மு சேகர் என்பவர் தகராறு உருட்டுக் கட்டையால் அடித்துக் கொலை மிரட்டல். அருணாச்சலம் போலீசில் புகார். | மணல் கொள்ளை | |
| 260. | 14.03.2009 | **சென்னை மாவட்டம்:** அம்பத்தூர் பிரித்திவாக்கம் என்.எல்.சி. காலனியைச் சேர்ந்தவர் ராஜன். இவரது மகள் விந்தியா (17). கடந்த மாதம் 21ம் தேதி முதல் காணவில்லை எனத் தந்தை போலீசில் புகார். சித்தப்பா சந்தோஷ்குமாரை வலுக் கட்டாயமாக பலாத்காரம் செய்ததாகப் போலீசில் வாக்குமூலம். சிறையில் அமைடப்பு. | பெண்களுக்கு எதிரான வன்முறை | |
| 261. | 14.03.2009 | **சென்னை மாவட்டம்:** வியார்பாடி எருக்கஞ்சேரி தர்மா நகர் சாலையில் தனியார் மருத்துவமனை அருகே ஒரு அடுக்குமாடி கட்டிடம் கட்டப்படடு வருகிறது. அங்கு சூடு போடப்பட்ட தீக்காயங்களுடன் குழந்தை கிடந்தது. போலீசார் அந்தக் குழந்தையை அன்பு இல்லத்தில் ஒப்படைப்பு. தீவிர சிகிச்சை. | பெண் குழந்தை சித்திரவதை | |

| | | | | |
|---|---|---|---|---|
| 262. | 14.03.2009 | **சென்னை மாவட்டம்:** ஆவடி செயிண்ட் பீட்டர் கல்லூரி மாணவி பிரியங்கா (18). அம்பேத்கார் ஏரகடம் ஏ.கே.ஏ. நகர் அன்னை தெரசா தெருவைச் சேர்ந்தவர் ஆனந்தி (வயத 19). இருவரும் கடந்த 26ம் தேதி விடுதியை விட்டு மாயம். போலீசில் புகார். விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | |
| 263. | 14.03.2009 | **சென்னை மாவட்டம்:** பொதட்டூர் பேட்டை அடுதுத பொம்மராஜுப் பேட்டை காலனியைச் சேர்ந்தவர் வடிவேல். இவரது மகன் பிகாஷ் (24). இவருக்குக் காளியம்மாள் என்ற மனைவி உள்ளார். வரதட்சணை கேட்டு சித்திரவதை. இரண்டாவதாக முதல் மனைவிக்குத் தெரியாமல் திருமணம். முதல் மனைவி போலீசில் புகார். கணவர் சிறை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | |
| 264. | 14.03.2009 | **சென்னை மாவட்டம்:** ஆவடி அடுத்த மோரை வெள்ளச்சேரி கிராமத்தைச் சேர்ந்தவர் மகேஸ் (34) இவரது மனைவி தனலெட்சுமி. கணவர் வரதட்சணை கொடுமை. அவமானம் தாங்காமல் தீக்குளிப்பு. அண்ணன் மகேந்திரன் முத்தா புதுப்பேட்டை போலீசில் புகார். விசாரணை. | வரதட்சணைக் கொடுமை | |
| 265. | 14.03.2009 | **சென்னை மாவட்டம்:** ஊத்துக்கோட்டை அருகே உள்ள வடமதுரை வெங்கடேசன் (32) இவரது மனைவி வனம்மாள். மனைவியிடம் கணவர் வரதட்சணை கேட்டு சித்திரவதை. போலீசில் புகார். வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | |
| 266. | 14.03.2009 | **சென்னை மாவட்டம்:** பல்லாவரம் அடுத்த பொழிச்சலூர் விநாயகம்நகரைச் சேர்ந்தவர் முத்தப்பா (29). இவரது மனைவி செல்வி (25) இவருக்கு இடது பக்கத்தில் உள்ள மார்பகத்தில் வலி ஏற்பட்டு 3 மாதமாக அவதி. குரோம்பேட்டை மருத்துவமனையில் கட்டி எடுக்க அனுமதி.அங்கு இடது பக்க மார்பகத்திற்கு பதிலாக வலது புறத்தில் ஆப்ரேஷன் செய்தனர். டாக்டர் மீது செல்வி இடது புறத்திற்கு பதிலாக வலது புறத்திற்கு ஆப்ரேசன் செய்ததாக புகார். விசாரணை. | மருத்துவர் அலட்சியம் | |
| 267. | 14.03.2009 | **காஞ்சிபுரம் மாவட்டம்:** அருந்ததிபாளையம் பகுதி அம்மு. இவர் கடந்த சில நாட்களுக்கு முன்பு குடிநீர் குழாயில் செருப்பு கழுவியதாக ஆயம்மாள் என்பவர் தட்டி கேட்பு. ஆத்திரம் அடைந்த அம்மு ஆயம்மாளை தாக்கி சித்திரவதை. ஆயம்மாள் போலீசில் புகார். போலீசார் நடவடிக்கை எடுக்காமல் காலதாமதம். பொது மக்கள் காவல் நிலையத்தை முற்றுகையிட்டு போராட்டம். | பெண்களுக்கு எதிரான வன்முறை | |
| 268. | 14.03.2009 | **சென்னை மாவட்டம்:** வியாசர்பாடி சம்மாநகரை சேர்ந்தவர் ஞானசேகரன் மகள் ஆனந்தி (23) இவரை சர்மாநகரைச் சேர்ந்த சுதாகர் என்பவர் காதலித்து வந்துள்ளார். இந்நிலையில் ஆனந்திக்கு சொந்ததில் திருமணம் நிச்சயம். ஆத்திரத்தில் காதலன் கத்தியல் குத்தி கொலை. போலீசில் புகார். விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | |
| 269. | 14.03.2009 | **சென்னை மாவட்டம்:** ஆவடி திருநின்றவூர் அண்ணாநகர் கம்பர்தெரு சுரேஷ். இவரது மனைவி | பெண்களுக்கு எதிரான | |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | மகேஸ்வரி (22) இவர் 3 மாத கர்ப்பிணி பெண். கணவர் மனைவியிடம் வரதட்சணைக் கேட்டு சித்திரவதை. மனமுடைந்த மகேஸ்வரி தீக்குளிப்பு. மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதித்த போது இறப்பு. ஆர்.டி.ஓ விசாரணை. | வன்முறை | |
| 270. | 14.03.2009 | **திருவள்ளுவர் மாவட்டம்:** கனகம்மாள் சமுத்திரம் அருகேயுள்ள கூடலூர் கிராமத்தைச் சேர்ந்தவர் லோகநாதன் (49) மனைவி வள்ளி (42). மதுராந்தகத்தில் வேலை செய்ததினால் அங்கு இரண்டாவது ஆலீஸ் என்பவரை திருமணம் செய்து கொண்டார். முதல் மனைவி போலீசில் புகார். விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | |
| 271. | 14.03.2009 | **திருவள்ளுவர் மாவட்டம்:** பூந்தமல்லி அண்ணாநகர் வீட்டு வசதி வாரிய குடியிருப்பில் வசித்து வருபவர் கிருஷ்ணமூர்த்தி (49) மனைவி ராஜகுமாரி. கணவர் குடித்ததினால் இருவருக்கும் தகராறு. மனைவியை கணவர் உயிரோடு எரித்த போது கணவரும் தீயில் கருகி சாவு. போலீசார் விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | |
| 272. | 14.03.2009 | **சென்னை மாவட்டம்:** ஆவடி அடுத்த பட்டாபிராம் காவல் நிலைய போலீஸ் ஏட்டு பாலு (55). இவர் பட்டாபிராம் பிடிஎம்எஸ் பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தார். அந்த பகுதி சார்லஸ் (28) என்பவர் சிரிப்பு போலீஸ் மாதிரி இருக்கிங்க என கிண்டல். இருவருக்கும் வாக்குவாதம். சட்டையை பிடித்து இழுத்து அடிக்க முயற்சி. பாலு போலீசில் புகார். வழக்கு பதிவு செய்து விசாரணை. | காவல் நிலைய வன்முறை | |
| 273. | 14.03.2009 | **ஈரோடு மாவட்டம்:** கவுந்தபாடி, கலங்கபாளையம், டவுன் பஞ்சாயத்து உட்பட நெசவாளர் காலனியில் அரசு துவக்கப்பள்ளி உள்ளது. இந்த பள்ளியில் சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து மாணவ / மாணவிகள் படித்து வருகின்றனர். இந்த பள்ளி மாணவ / மாணவிகளுக்கு மதிய உணவு திறந்த வெளியில் வழங்கப்பட்டடு வருகிறது. இதன் அருகில் பொது கழிப்பிடம் இருப்பதாக மாணவகள் குற்றச்சாட்டு. சமையல் செய்யும் போது விஷ வண்டுகள் சாப்பாட்டுக்குள் விழுகின்றன. | பள்ளி வன்முறை | பெருமாள், RMA |
| 274. | 14.03.2009 | **ஈரோடு மாவட்டம்:** பெரியார்நகர் அசோகபுரியை சேர்ந்தவர் லட்சுமி. இவரது மனைவி சின்னையன் இறந்து விட்டர். லட்சுமி எடை நிலையத்தில் வேலை செய்து வந்தார். ஈ.வி.என் சாலையில் வசிக்கும் ஜெகன் என்பவர் லட்சுமியை ஆசைக்கு இணங்க வற்புறுத்தியுள்ளார். லட்சுமி மறுப்பு. மண்ணெணைய் ஊற்றி எரிக்க முயற்சி. ஈரோடு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ப்பு. போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | பெருமாள், RMA |
| 275. | 14.03.2009 | **ஈரோடு மாவட்டம்:** கோபி அவ்வையார் பாளையத்தை சேர்ந்தவர் தங்கராசு. இவரது மனைவி தேவி (40) கணவர் அடிக்கடி வரதட்சணை கேட்டு சித்திரவதை செய்ததால் மகள் இறந்ததாக போலீசில் | பெண்களுக்கு எதிரான வன்முறை | பெருமாள், RMA |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தந்தை புகார். விசாரணை. | | |
| 276. | 14.03.2009 | **ஈரோடு மாவட்டம்:** பெருந்துறை யூனியன் கருமாண்டி செல்லிபாளையம் டவுன் பஞ்சாயத்து 23 வார்டுகளை கொண்டது. இதன் தலைவர் திமுக கட்சி தேவிகா தலைவராக உள்ளார். 17, 18 வார்டுகளில் தாழ்த்தப்பட்ட மக்கள் அதிக அளவில் வசித்து வருகின்றனர். இதில் அடிப்படை வசதி செய்யாமல் தவிப்பதாக அப்பகுதி மக்கள் புகார். குடிநீர் வடிகால் வாரிய அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டம். | புறக்கணிப்பு | பெருமாள், RMA |
| 277. | 14.03.2009 | **ஈரோடு மாவட்டம்:** கோபி, வெள்ளைப்பாளையம் அம்பேத்கர் நகர் பகுதி கிருஷ்ணசாமி மகன் சேகர். இவரது மனைவி வளர்மதி. சம்பள பணம் குறித்து இருவருக்கும் இடையே தகராறு. மனமுடைந்த வளர்மதி மண்ணெணைய் ஊற்றி உடலில் தீ வைப்பு. கோபி மருத்துவமனையில் அனுமதி. சிகிச்சை பலனிம்மால் இறப்பு. | பெண்களுக்கு எதிரான வன்முறை | பெருமாள், RMA |
| 278. | 14.03.2009 | **திருவண்ணாமலை மாவட்டம்:** கலசப்பாக்கம் அடுத்த தென்மாதிமங்கலம் அரசு உயர்–நிலைப்பள்ளியில் 400க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் படித்து வருகின்றனர். இதில் பத்தாம் வகுப்பு மாணவி நதியாவை ஆசிரியர் சிவக்குமார் கடத்தி சென்றதாக மாணவ, மாணவிகள் சாலை மறியல். CEO மாணவி நதியா ஆசிரியரிடம் விசாரணை. ஆசிரியர் இடமாற்றம். | பெண்களுக்கு எதிரான வன்முறை | |
| 279. | 14.03.2009 | **திருச்சி மாவட்டம்:** மத்திய சிறையில் தண்டனை பெற்ற விசாரணை கைதியாக திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி நல்லையன் (26) இருந்து வருகிறார். அதே சிறையில் கொலை வழக்கில் தண்டனை பெற்ற காரைக்குடி நெல்லைவயல் ஆறுமுகம் (25) உள்ளார். துப்பரவு பணி சம்பந்தமாக இருவருக்கும் தகராறு. மண் வெட்டியால் தலை வெட்டி நல்லையனை திருச்சி மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தனர். ஆறுமுகத்தின் மீது வழக்கு பதிவு. விசாரணை. | கைதி தாக்குதல் | |
| 280. | 14.03.2009 | **ஈரோடு மாவட்டம்:** சித்தோடு சத்தி சாலையில் அமைந்துள்ளது சக்தி உயர்நிலைப்பள்ளி. இங்கு 1 முதல் 10ம் வகுப்பு வரை 300 பேர் படித்து வருகின்றனர். இதன் எதிரில் பிளீச்சங்கி பட்டறை செயல்பட்டு வருகிறது. அங்கு கெமிக்கல்லை துணியின் நிறம் மாற பயன்படுத்தி வருவதால் கலவை அதிக நெடியுடன் காற்றி கலந்து வந்து கண் எரிச்சல் ஏற்படுத்துவதாக மாணவர்கள் அவதிப்படுகின்றனர். புகார். நடவடிக்கை எடுக்க கோரிக்கை. | | |
| 281. | 14.03.2009 | **ஈரோடு மாவட்டம்:** கோபி அலங்கியம் ரோடு பகுதி முத்துலட்சுமி (44) அதே பகுதியைச் சேர்ந்தவர் லட்சுமி (40) இருவரும் ஆடு மேய்த்துக் கொண்டிருக்கும் போது தகராறு. லட்சுமி கணவர் சுப்பிரமணியத்திடம் முறையீடு. முத்துலட்சுமியை சுப்பிரமணியம் கண்டித்து, கல்லால் தாக்கினார். லட்சுமி போலீசில் புகார். விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | |



மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| 282. | 14.03.2009 | **ஈரோடு மாவட்டம்:** குமாரபாளையம் அருகே காளையார்பாளையத்தைச் சேர்ந்தவர் பழனிச்சாமி (65) மனைவி லட்சுமி (60) பழனிசாமி குடித்து விட்டு அடிக்கடி தகராறு. ஆத்திரம் அடைந்த பழனிச்சாமி லட்சுமி தலையில் கல்லை போட்டு கொல்ல முயற்சி. பலத்த காயம். மருத்துவமனையில் சிகிச்சை சேர்ப்பு. போலீசார் விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | |
| 283. | 14.03.2009 | **ஈரோடு மாவட்டம்:** கோபி அருகே நல்லகவுண்டன் பாளையம் தோகைமுருகன் நகரை சேர்ந்தவர் தெய்வேந்திரன். (26). அதே பகுதியை சேர்ந்த பானுப்பிரியா (23) இருவரும் காதலித்து திருமணம் செய்து கொண்டனர். இருவருக்கும் தகராறு ஏற்பட்டு தந்தை வீட்டுக்கு சென்றவரை தன்னுடன் வாழ வருமாறு பானுப்பிரியாவை அழைத்தனர். தகராறு ஏற்பட்டு தற்கொலை. போலீசில் புகார். விசாரணை. | பெண்கள் மீதா ன வன்முறை | |
| 284. | 14.03.2009 | **ஈரோடு மாவட்டம்:** கோபி அலங்கியம் ரோடு பகுதி முத்துலட்சுமி (44) அதே பகுதியைச் சேர்ந்தவர் லட்சுமி (40) இருவரும் ஆடு மேய்த்துக் கொண்டிருக்கும் போது தகராறு. லட்சுமி கணவர் சுப்பிரமணியத்திடம் முறையீடு. முத்துலட்சுமியை சுப்பிரமணியம் கண்டித்து, கல்லால் தாக்கினார். லட்சுமி போலீசில் புகார். விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | |
| 285. | 14.03.2009 | **ஈரோடு மாவட்டம்:** கோபி அருகே கள்ளிப்பட்டியைச் சேர்ந்தவர் வசந்தி (30) இவர் குன்று பகுதி மாதப்பன் என்பவரிடம் இவர்கள் நடத்தி வரும் டீக்கடை அருகில் உள்ள நிலத்தில் வேலி அமைந்துள்ளது தொடர்பாக கந்தப்பன் மகன்கள் அரப்புனி, கந்தசாமி என்பவருக்கும் தகராறு. முன் விரோதம் அரப்புளி குடித்து விட்டு கடைமுன் தகராறு. தட்டிக் கேட்ட வசந்தியை கல்லால் அடித்து சித்ரவதை. போலீசில் புகார். விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | |